ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2406/19 - 2024 ඔක්තෝබර් මස 16 වැනි බදාදා - 2024.10.16

*2406/19 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

76 அ பிரிவின் கீழான அறிவித்தல்

*2024.09.21* ஆந் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின்போது வாக்காளரின் இடது கை சிறு விரலில் தோதான குறியீடு இடப்பட்டுள்ளமையால், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 53அ(3) ஆம் பிரிவினால் வாக்காளரை தோதான குறியீட்டினால் அடையாளமிடுதல் தொடர்பில் எழக்கூடிய பிரச்சினையை நிவர்த்திசெய்யும் பொருட்டு *2024.10.26* ஆந் திகதி நடைபெறவுள்ள எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலின்போது வாக்காளரின் இடது கைப் பெருவிரல் தோதான குறியீட்டினால் அடையாளமிடப்படும்.

வாக்காளரின் இடது கையில் பெருவிரல் இல்லாதிருக்கும் பட்சத்தில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 53அ(3), அ, ஆ (i), (ii), (iii) ஆம் பிரிவுகளுக்கு அமைய அவரது வலது கையிலுள்ள வேறேதேனுமொரு விரல் தோதான குறியீட்டினால் அடையாளமிடப்படும் என்பதை உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 76அ பிரிவிற்கிணங்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள அதிகாரப்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றோம்.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சி. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
*2024*, ஒற்றோபர் *15*.

EOG *10-0142*